Heal Your Heart®

Vaso-Meditech (EECP Center)






# இதய நோய் உங்கள் வாழ்க்கைத் தரத்தைப் பாதிக்கின்றதா?

இதய நோயாளிகளின் தகுந்த தகவல் வழிகாட்டி

வாசோ-மெடிடெக் இஇசிபி (EECP)

## இதய நோய் ஏன் ஏற்படுகின்றது என்பதை தெரிந்து கொள்ளுங்கள்

இதயத் தசைகளுக்குச் செல்லும் இரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் மாரடைப்பு மற்றும் இதயச் செயலிழப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவ்வாறு ஒருவருக்கு ஏற்படும்போது மருத்துவர்கள் இதயப் பாதிப்புக்கு ஏற்றவாறு மருந்து மாத்திரைகள், ஆஞ்சியோ பிளாஸ்டி அல்லது ஸ்டெண்ட் மற்றும் பைபாஸ் சர்ஜரி செய்து நம்மைக் காப்பாற்றுகின்றனர். அதே சமயம் இதயம் மிகவும் பலவீனமானவர்கள், இதயத்தசை செயலிழப்பு அதிகம் உள்ளவர்கள், அறுவை சிகிச்சை செய்ய முடியாதவர்களுக்கு எந்தவித அபத்தும் இல்லாமல், இரத்த இழப்பு இல்லாமல் செய்யக்கூடிய மூன்றாவது சிகிச்சை முறைதான் (EECP) இ.இ.சி.பி. (Enhanced External Counter Pulsation) என்றழைக்கப்படுகிறது. இது இதய நோயாளிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்த சிறந்த சிகிச்சையாகும்.

## இ.இ.சி.பி. (EECP) சிகிச்சை என்றால் என்ன?

இச்சிகிச்சைமுறை முதன் முதலில் அமெரிக்காவில் கண்டுபிடிக்கப்பட்டு, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளால் அங்கீகாரம் பெற்ற சிகிச்சை ஆகும். ஜப்பான், சீனா, கொரியா போன்ற வளர்ச்சி அடைந்த நாடுகளிலும், தற்போது இந்தியாவிலும் மிகவும் பிரபலமடைந்துள்ளது. இச்சிகிச்சையின் போது கால் மற்றும் தொடைப்பகுதிகளில் அதிக அழுத்தத்துடன் காற்று செல்லும்போது, இரத்தம் மிக வேகமாக இதயத்திற்கு பம்ப் செய்யப்படுவதால் புதிய நுண்ணிய இரத்தக் குழாய்கள் உருவாகின்றன. இரத்தம் மிகச் சீராகப் பாய்வதன் மூலம் இதயம் செய்யும் வேலையை எளிதாக்குகிறது.

### EECP சிகிச்சைக்குப் பொருத்தமானவர்கள் யார்?

- இதயத்தில் வலி உள்ளவர்கள் அல்லது மூச்சு விடுவதில் சிரமம் உள்ளவர்கள்.
- இதய நோயின் ஆரம்ப அறிகுறிகள் இருப்பவர்கள்.
- ஆஞ்சியோபிளாஸ்டி மற்றும் பைபாஸ் அறுவை சிகிச்சை செய்தும் முற்றிலும் குணமாகாதவர்கள்.
- ஆஞ்சியோபிளாஸ்டி அல்லது பைபாஸ் அறுவைச் சிகிச்சை செய்யமுடியாதப் பொருளாதார நிலையில் இருப்பவர்கள்.
- ஆஞ்சியோபிளாஸ்டி அல்லது பைபாஸ் அறுவை சிகிச்சை செய்ய விருப்பம் இல்லாதவர்கள்
- மருத்துவர்களால் அறுவைச் சிகிச்சை செய்யமுடியாத அளவுக்கு உடல் நலம் குன்றியவர்கள்

## Collateral Circulation என்றால் என்ன?

ஒவ்வொரு மனிதனுக்கும் இதயத்தில் சிறிய இரத்தக் குழாய்களின் நெட்வொர்க் மில்லியன் கணக்கில் உள்ளன. இந்தச் சிறிய இரத்தக் குழாய்கள் Collateral என அழைக்கப்படுகின்றன. இவை போதுமான அளவு இருக்கும் பொழுது, அடைப்பைச் சுற்றி மாற்று வழியில் இரத்தத்தை எடுத்துச் செல்லும். நமக்கு வயதாகும்போது இந்த Collateral உருவாகுவது போதுமானதாக இருக்காது. EECP சிகிச்சையானது Collateral சுழற்சியை அதிகரித்து இதயத் தசைகளைப் பாதுகாக்கிறது.

## EECP சிகிச்சை எத்தனை நாட்களுக்கு எடுக்க வேண்டும்? இதன் சிறப்பு அம்சம் என்ன?

EECP சிகிச்சை 35 நாட்களுக்குக் கண்டிப்பாக எடுக்க வேண்டும். ஒரு நாளைக்கு 1 மணி நேரம் சிகிச்சை கொடுக்கப்படும். ஒரு வாரத்திற்கு 6 நாட்கள் வீதம் 6 வாரங்கள் தேவைப்படும். இச்சிகிச்சைக்கு மருத்துவ மனையில் தொடர்ந்து தங்க வேண்டிய அவசியம் இல்லை. புற நோயாளியாக தினமும் வந்து, சிகிச்சைப் பெற்றுச் செல்லலாம். தேவைப்பட்டால் மருத்துவரின் ஆலோசனையின்படி ஒரு நாளில் காலை, மாலை 2 முறை சிகிச்சை மேற்கொண்டு 3 வாரங்களிலும் இந்தச் சிகிச்சையைப் பயனுள்ளவாறு முடித்துக் கொள்ளலாம்.

## EECP சிகிச்சைக்கு முன்னும் பின்னும் செய்ய வேண்டியது என்ன?

சிகிச்சைக்கு வருவதற்கு 90 நிமிடங்களுக்கு (1.30 hrs) முன்னால் திட அல்லது திரவ உணவை எடுத்திருக்க வேண்டும். சிகிச்சையின்போது EECP மையம் வழங்கும் எலாஸ்டிக் பேன்ட் அணிய வேண்டும். சிகிச்சைக்குப் பிறகு மருத்துவர், நீங்கள் உட்கொள்ள வேண்டிய மாத்திரையின் விபரங்களைக் கூறி, தேவையான மாத்திரைகளை மட்டும் உட்கொள்ளப் பரிந்துரை செய்வார். நாளடைவில் நீங்கள் உட்கொள்ளும் மாத்திரையின் அளவு குறைக்கப்படும்.

## EECP சிகிச்சையின்போது நீங்கள் உணர்வது என்ன?

இச்சிகிச்சை வலி இல்லாத, மிகவும் வசதியான சிறந்த சிகிச்சை ஆகும். இது Passive Exercise ஆக இருப்பதால் சிகிச்சையின்போது உங்களுடைய இரத்த அழுத்தம் மற்றும் இதயத்துடிப்பு அதிகரிப்பதில்லை. கால்கள் மற்றும் தொடைப் பகுதியில் காற்றுப்பைகள் இனைப்பதால், அதிக அழுத்தம் ஏற்பட்டு உடல் முழுவதும் இரத்தம் சீராகப் பாய்வதை நன்கு உணரமுடியும். முதல் இரண்டு நாட்கள் சிகிச்சைக்கு சற்றே சோர்வு ஏற்பட்டாலும், அதன்பிறகு நீங்கள் நன்குப் புத்துணர்ச்சியுடன் இருப்பதை உணர்வீர்கள். சிகிச்சை அறையில் தொலைக்காட்சிப் பார்ப்பது அல்லது பாட்டுக் கேட்பதின் மூலம் ஒரு மணி நேரம் செல்வதே உங்களுக்குத் தெரியாது.

## சிகிச்சை செய்தபின் ஏற்படும் முன்னேற்றத்தை எப்போது உணரமுடியும்?

ஒவ்வொரு நோயாளிக்கும் நல்ல முன்னேற்றம் ஏற்படுவதில் சற்று மாறுபாடு உண்டு. சிலருக்கு 15 முதல் 20 நாட்களில் சிறந்த முன்னேற்றத்தை உணரமுடியும். பொதுவாக அனைவருக்கும் 6 வாரங்களில் நல்ல புத்துணர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட்டு மகிழ்வுடன் இல்லத்திற்குச் செல்லலாம்.

## EECP சிகிச்சையினால் ஏற்படும் நன்மைகள்

- இதய நோயாளிகள் எதிர்பார்த்த நல்ல முன்னேற்றம் கிடைக்கும்.
- சிகிச்சைக்கு முன்பு நடந்ததைவிட வேகமாகச் சிரமமின்றி கூடுதலாக அதிக தூரம் நடக்க முடியும்.
- நடக்கும்போது மார்புவலியோ மூச்சுத்திணறலோ ஏற்படுவதில்லை.
- நாளடைவில் மருந்து, மாத்திரையின் அளவைக் குறைக்கமுடியும்.
- நல்லப் புத்துணர்ச்சியுடன் இருப்பதை உணரமுடியும்.
- முன்பைவிடச் சற்று அதிக வேலை செய்ய இயலும்.
- மூச்சு வாங்குதல், படிகளில் ஏறும்போது ஏற்படும் சிரமம் குறையும்.



## சிகிச்சை முடிந்தபின் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

● மது மற்றும் புகைப் பிடிக்கும் பழக்கத்தை அறவே விட்டுவிட வேண்டும். ● உடல் எடையைக் குறைக்க வேண்டும். ● தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். ● இதயத்திற்கு இதமான கொழுப்பு, உப்பு குறைந்த மற்றும் கீரை, காய்கறிகள், பழங்கள், பயிறு வகைகள் நிறைந்த உணவை உட்கொள்ள வேண்டும்.

இதைத் தினமும் நீங்கள் பின்பற்றினால் கொழுப்பு, உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் குறையும். EECP சிகிச்சையின்போது உங்களுக்குப் புதிய நுண்ணிய இரத்தக் குழாய்கள் உருவாகின்றன. நீங்கள் பின்பற்ற வேண்டிய மேற்கூறிய 4 செயல்களைச் சரியாக பின்பற்றாவிடில், மீண்டும் அடைப்பினால் இரத்தக் குழாய்கள் சுருங்குவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

## EECP சிகிச்சை பெற வயது வரம்பு உண்டா?

EECP சிகிச்சை 30 வயது முதல் 95 வயதுள்ள அனைவரும் பெற்றுப் பயன்பெற முடியும். இதய நோய் வருவதற்கு முன் நம்மை தற்காத்துக் கொள்ள விரும்பு கின்றவர்கள்கூட இச்சிகிச்சையை மேற்கொண்டு வருமுன் காத்துக் கொள்ளலாம்.

## இதய நோயாளிகள் EECP தெரப்பி சிகிச்சை பெறுவதின் மூலம் ஏற்படும் நன்மைகள்

- இதய நோயாளிகள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை மேற்கொள்ள வேண்டியதில்லை. புறநோயாளியாக வந்து சிகிச்சை பெற்றுச் செல்லலாம்.
- இது பாதுகாப்பான, வலி இல்லாத, பக்க விளைவில்லாத செலவு குறைவான இதயநோய் சிகிச்சையாகும்.
- இது அறுவை சிகிச்சை இல்லாத சிகிச்சை என்பதால் நோயாளிகள் தினமும் செய்கின்ற வேலைகளை தொடர்ந்து செய்யமுடியும்.

## இச்சிகிச்சை எவ்வளவு நாட்களுக்கு பயன்தரும்?

- 3 முதல் 5 வருடங்களுக்கு நல்ல பலனைத் தரும்.
- 35 நாட்கள் தொடர் சிகிச்சை மிகவும் அவசியமானதாகும்.

## EECP தெரப்பி சிகிச்சையின்போது ஏற்படும் சில சிறிய சிரமங்கள் யாவை?



சிலருக்கு தோலில் எரிச்சல் ஏற்படலாம். காற்று பைகள் (Cuffs) அழுத்துவதால் சிறு சிராய்ப்புகள் ஏற்படலாம். சில நோயாளிகளுக்கு சற்று மூச்சு வாங்கலாம். அவ்வாறு சிரமங்கள் ஏற்படும் போது உங்களுக்கு EECP சிகிச்சையாளர்கள் தகுந்த முதலுதவி தருவார்கள். அவர்கள் அதற்கான பயிற்சிகள் பெற்றிருப்பதால் தேவையான சிகிச்சை செய்து உடனடி நிவாரணம் தருவதால் பயப்பட வேண்டிய அவசியம் இருக்காது.

## தொடர் சிகிச்சை (35 நாட்கள்) மிகவும் அவசியமா?

இதய நோயாளிகள் தொடர் சிகிச்சை பெறுவது மிகவும் அவசியமான ஒன்றாகும். அவ்வாறு தொடர்ந்து இச்சிகிச்சையை எடுக்கும்போதுதான் இதயத்தின் நுண்ணிய இரத்த நாளங்களிலும் இரத்த ஓட்டம் சீராக தங்குத் தடையின்றிச் செல்லும். அதனால் இச்சிகிச்சையின் முழு பலனையும் எளிதாக பெற முடியும்.

## EECP சிகிச்சையினால் இரத்தக் குழாய்களில் உள்ள அடைப்பு இடம் பெயர்வதற்கான வாய்ப்பு உள்ளதா?

EECP சிகிச்சை செய்யும்போது இரத்த ஓட்டமே இல்லாத பல இரத்த நாளங்களை புதுப்பிக்கச் செய்துவிடுவதால், நல்ல முறையில் இதயத்திற்கு இரத்த ஓட்டம் நடைபெற ஏதுவாக அமைந்து விடுகிறது. அதே சமயம் அடைப்பு உள்ள இரத்த நாளங்களைச் சுற்றிப் புதிய பல நுண்ணிய இரத்த நாளங்களை உருவாக்கி விடுகிறது.

## பேஸ்மேக்கர் வைத்திருப்பவர்கள் EECP சிகிச்சை எடுத்துக் கொள்ளலாமா?

தாராளமாக எந்த தயக்கமும் இல்லாமல் இச்சிகிச்சையை எடுத்துக் கொள்ளலாம்.

## பைபாஸ் சர்ஜரி, ஆஞ்சியோ பிளாஸ்டி, ஸ்டென்ட் வைத்திருப்பவர்கள் இச்சிகிச்சையை பெறமுடியுமா?

மேற்கண்ட அனைத்து சிகிச்சை பெற்றவர்களும் எந்தவித ஆபத்தும் இல்லாமல் EECP செய்து கொள்ள முடியும். மேலும் மறுபடியும் அடைப்பு (Block) ஏற்படாமல் பாதுகாப்பதோடு இரத்த ஓட்டம் தடையின்றி, முன்பைவிட வேகமாகச் செல்லவும் துணைபுரிந்து இதயத்தை பாதுகாக்கிறது.



## அதிக இரத்த அழுத்தம் (Hyper Tension) இருப்பவர்களுக்கு இச்சிகிச்சையினால் மேலும் பாதிப்பு ஏற்படுமா?

இல்லை. இச்சிகிச்சையினால் இரத்த அழுத்தத்திற்கு எடுக்கும் மாத்திரையின் அளவு நாளடைவில் குறைக்கப்படுகிறது. இரத்த அழுத்தம் நல்ல கட்டுப்பாட்டுக்குள் வரும்.

## சர்க்கரை வியாதி (Diabetes) இருப்பவர்களுக்கு EECP சிகிச்சை உதவுமா?

நிச்சயமாக உதவும். சர்க்கரையின் அளவு காலப்போக்கில் நன்கு குறைந்து, நல்லக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க உதவும்.

## நரம்பு சுருண்டு (Varicose Veins) இருப்பவர்களுக்கு EECP சிகிச்சை பலன் தருமா?

நிச்சயமாக நல்ல பலனைத் தரும். EECP சிகிச்சையாளர் உங்களுக்கு போதுமான வசதிகளை செய்து கொடுத்து உதவுவார்கள்.

## Atrial Fibrillations மற்றும் இதயத்துடிப்புச் சீராக இல்லாதவர்கள் இச்சிகிச்சையைப் பெறமுடியுமா?

நிச்சயம் முடியும். மருத்துவர் இதயத்துடிப்பு அதிகம் உள்ளவர்களுக்கு (அதாவது ஒரு நிமிடத்திற்கு 100க்கும் அதிகமான இதயத் துடிப்பு) தக்க மருத்துவமும், ஆலோசனையும் தந்து EECP சிகிச்சை பெற உதவி புரிவார்கள்.

## Peripheral Vascular Disease உள்ளவர்களுக்கு இந்தச் சிகிச்சையினால் பயன் கிடைக்குமா?

நிச்சயம் கிடைக்கும். இரத்த ஓட்டம் மிகவும் மோசமாக உள்ளவர்கள் இச் சிகிச்சையைக் கண்டிப்பாக எடுத்துக் கொள்ளலாம். இச்சிகிச்சையினால் உடல் முழுவதும் இரத்த ஓட்டம் அதிகரிப்பதினால் கால்களில் உள்ள நரம்புகளுக்கு செல்லும் இரத்தக்குழாய்கள் சற்று விரிவடைந்து மிகச் சிறந்த பலனை கொடுக்கும்.

## வேறு எந்தெந்த நோய்களுக்கு இச்சிகிச்சை நல்ல நிவாரணத்தை தருகிறது?

EECP சிகிக்சையின் மூலம் தலை முதல் கால் வரை சரியாக இரத்த ஓட்டம் செல்வதால் சிறுநீரக பாதிப்பு, நரம்புத்தளர்ச்சி, நீரிழிவு நோய் கண் பார்வை குறைபாடு, மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் அனைவரும் பயன்பெற முடியும்.

## எத்தகைய நோயாளிகளுக்கு EECP சிகிச்சை கொடுக்க முடியாது?

இதய நோயாளிகளுக்கு EECP மிகவும் சிறந்த மருத்துவ பலனைத் தரும். அதே வேளையில் அதிக அழுத்தத்தால் தமனி இரத்தக்குழாயில் ஏற்கனவே வெடிப்பு ஏற்பட்டு இரத்தக்கசிவு இருப்பவர்களுக்கு மட்டும் இச்சிகிச்சையை கொடுக்க முடியாது.

## ஒருமுறை EECP எடுத்தபின் மீண்டும் தொடர்ந்து சிகிச்சைப் பெறலாமா?

தாராளமாக மீண்டும் சிகிச்சை பெற முடியும். அதனால் எந்தப் பாதிப்பும் வராது.



## EECP சிகிச்சை எடுக்கும்போது நான் உடற்பயிற்சியினை ஆரம்பிக்கலாமா?

உங்கள் இருதயம் எந்த அளவுக்கு செயல்படுகிறது என்பதை புரிந்து கொண்டபின் 15 நாட்கள் EECP சிகிச்சை முடிந்த பிறகே உங்கள் மருத்துவர், உங்கள் உடல் நிலைக்கு தகுந்த உடற் பயிற்சிகளைச் செய்ய சொல்வார். அதை நீங்கள் ஒழுங்காகப் பின்பற்றினால் போதுமானது.

## துளையிடும் முறையில்லாத EECP இதயச் சிகிச்சையை எடுத்துக் கொள்ளும் முன் நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டியவை

### நீங்கள் எடுத்துக் கொள்ள விரும்பும் சிகிச்சை முறை FDA-ஆல் ஏற்றுக்கொள்ளப்பட்டதா?

FDA-என்பது மருத்துவ உபகரண நிறுவனங்கள் தங்கள் உபகரணம் நோயாளிகளுக்குப் பாதுகாப்பானது மற்றும் நன்மையானது என்பதை நிருபிக்க வேண்டும். அவர்கள் தங்கள் கூற்றை நிரூபிக்க மருத்துவச் சோதனைத் தேவைப்படுகிறது.

உதாரணமாக FDA-ஆல் அங்கீகரிக்கப்படாத Stent-களை அமெரிக்க நோயாளி களுக்கு பொறுத்த முடியாது. இந்திய அரசாங்கத்தில் ஒழுங்கு முறை அமைப்பு இல்லாதபோது அவைகள் உபயோகப்படுத்தபட்டன. பின்னர் அவைகள் தடைச் செய்யப்பட்டு ÚSA-FDA ஆல் அங்கீகரிக்கப்பட்ட Stentகள் உபயோகிக்கப்படுகின்றன. FDA-ஆல் அங்கீகரிக்கப்படாத சீன உபகரணங்கள் மருத்துவச் சிகிச்சை முறைக்குத் தேவையான தரம் மற்றும் பாதுகாப்பு சார்ந்த பரிசோதனைக்கு உட்படுத்தப்படாமல் இருக்கலாம். இதனால் சிகிச்சையின் போது நோயாளிகளுக்கு ஆபத்து நேர வாய்ப்புள்ளது. தங்களுக்கு தரப்படும் சிகிச்சை முறை மற்றும் பயன்படுத்தபடும் உபகாரணங்கள் உலகில் உள்ள ஒழுங்குமுறை ஆணையத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையா என்பதை அறிய ஒவ்வொரு நோயாளிகளுக்கும் உரிமை உண்டு.

### EECP சிகிச்சையளிக்கப்படும் முறைக்கு வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கைகள் எவையேனும் உள்ளனவா?

இந்திய மற்றும் சர்வதேச அளவில் 200க்கும் மேற்பட்ட ஆய்வு அறிக்கைகளுடன் EECP சிகிச்சை முறை மட்டுமே மருத்துவ ஆய்வுக்கு உள்ளாகியுள்ளது. EECP முறை மட்டுமே இரத்த ஓட்டத்தை அதிகரிப்பதுடன் இதய நோய்க்கான அறிகுறிகளை நீக்குகிறது என்பதை தெளிவுப்படுத்துகின்றன.

## Vaso-Meditech EECP பற்றிய உண்மைகள்

- EECP முறையை இந்தியாவுக்கு அமெரிக்காவில் இருந்து கொண்டு வந்தவர் டாக்டர் ராமசாமி.
- இந்தியாவில் EECP முறையைப் பிரபலபடுத்தியவர்.
- சர்வதேச முறைப்படி நிபுணர்களின் வழிகாட்டுதலினால் 5000க்கும் அதிகமான நோயாளிகளுக்கு இதயச் சிகிச்சை அளித்துள்ளனர்.
- இந்தியா முழுவதும் தனி மையங்கள், பல்நோக்கு மருத்துவமனைகள், தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் பல்கலைகழக மருத்துவமணைகள் ஆகியவற்றின் மூலம் வெற்றிகரமாக சிகிச்சை வழங்கி வருகிறார்.
- மருத்துவ நிபுணரின் மேற்பார்வையின் கீழ் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி முறையில் நன்கு பயிற்சிப்பெற்ற EECP வல்லுநர்களால் சிகிச்சையளிக்கப்படுகிறது.
- Non-Invasive Ischemic Burden Reduction Program (NIBR-P)மட்டுமே தமிழ்நாடு அரசினால் அங்கீகரிக்கப்பட்டு, தேசிய காப்பீட்டு நிறுவனங்களால் காப்பீடு வழங்கப்படுகிறது.
- Vaso-Meditech (EECP Centers) மட்டுமே சர்வதேச அளவில் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட இதய நோய் சிகிச்சை வழிமுறைகளில் சிகிச்சை அளித்து வரும் ஒரே நிறுவனம்.
- Vaso-Meditech (EECP Centers) EECP சிகிச்சைப் பெறும் இந்திய நோயாளிகளின் பதிவேட்டைக் கண்காணித்துப் பராமரித்து வருகிறது. (Online Patient Electronic Data Monitoring Registry Portal)
- தேசிய மற்றும் சர்வ தேச அளவில் முன்னணி EECPசிகிச்சை நிபுணர் Dr. S. Ramasamy, MO அவர்கள் தலைமையில் Vaso-Meditech EECP சிகிச்சை நன்கு செயல்படுத்தப்படுகிறது. International EECP Therapist Association-யின் மருத்துவ இயக்குநராக இவர் பணியாற்றுகிறார்.




- Vaso-Meditech மையங்களின் சிகிச்சை முடிவுகள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் புகழ் பெற்ற பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டுள்ளன.

# VASO - MEDITECH

# EECP THERAPY

**ENHANCED EXTERNAL COUNTER PULSATION**

---

## SIMPLE AND NON- INVASIVE TREATMENT FOR CHEST PAIN AND HEART FAILURE

Heal Your Heart®

Vaso-Meditech (EECP Center)


**For more information contact:**

Vaso-Meditech Pvt.Ltd, No,4/77, Thanthai Periyar St., ECR,
Neelangarai, Chennai - 600 115, Contact : 90030 70065, 044 24492946
www.healurheart.com, www.vasomeditech.com